# *பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு*

# திருவழிபாடு ஆண்டு - B

# 2021-04-25

***இன்றைய வாசகங்கள்:***

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்.* 4: 8-12,

*பதிலுரைப்பாடல் திபா.* 118:1, 8-9, 21-23, 26,28,29,

*திருத்தூதர் யோவான் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்.* 3:1-2,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 10: 11-18

## திருப்பலி முன்னுரை:

*என் இறைவன் நீரே! உமக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்; என் கடவுளே! உம்மைப் புகழ்ந்தேத்துகின்றேன். ஏனெனில், நீர் நல்லவர்; என்றென்றும் உள்ளது உமது பேரன்பு.*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! நல்லவரும், நிலையான பேரன்பை உடையவருமான நம் இறைத் தந்தையின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள் கூறி பாஸ்காக் காலம் நான்காம் ஞாயிறு திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.*

*"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு. மனிதர்மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்! உயர்குடியினர் மீது நம்பிக்கை வைப்பதைவிட, ஆண்டவரிடம் அடைக்கலம் புகுவதே நலம்!" என்னும் இறைவார்த்தைகள் நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப்பார்க்க நமக்கு ஒரு அழைப்பைக் கொடுக்கின்றன. நாம் நமது சொந்த வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும், ஆன்மீக வாழ்விலும் சந்தித்த அவலங்களுக்கும், அழுகுரல்களுக்கும் காரணம் என்ன என்ற வினாவுக்குரிய விடையையும், நமக்கு மீட்பு எங்கிருந்து வருகின்றது என்ற உண்மையையும் இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு அழுத்தம், திருத்தமாய் எடுத்துக் கூறுகின்றன. உண்மையான இந்த நல்ல செய்திக்காகவும், நல்லாயனாம் இயேசுவின் வழிநடத்துதலுக்காகவும் நன்றி செலுத்துவோம். மனிதர் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை விடுத்து நம் கடவுளாம் ஆண்டவரிடம் நம்பிக்கை கொள்ளுவோம். எப்பொழுதும் இறை நம்பிக்கையில் நிலைத்திருக்க அருள் வரம் கேட்டு இத்திருப்பலியில் பங்கேற்போம்.*

## ***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***ஆற்றலின் ஊற்றாம் இறைவா,***

*திருச்சபையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும், இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சிகளாக உலகெங்கும் நற்செய்தியை பறைசாற்றத் தேவையான துணிவை வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

***எமது மன்றாட்டைப் வெறுத்துத் தள்ளாத தந்தையே இறைவா!***

*உம்முடைய மக்களாகிய நாங்கள் மனிதர்மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்! என்னும் உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, எமது வாழ்வில் உமது குரலுக்கு மாத்திரமே செவிகொடுத்து வாழ்வதன் வழியாக உம்மைக் கண்டுணர்ந்து வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!***

*நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***அன்புத் தந்தையே இறைவா!***

*உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள்: நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***உன்னதரான தந்தையே!***

*திருஅவையின் தூண்களாக வளர்ந்து வரும் எம் இளையோர்கள் உலகில் ஏற்படும் மாற்றங்களால் அவர்களின் நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்து, அவை தரும் வாக்குறுதியால் தவறான பாதையில் போகாமல், உமது வாக்குறுதிகள் அவர்களின் வாழ்க்கைப் பாதைக்கு வழிக்காட்டி என்பதில் உறுதியோடு காத்திருக்கும் நல்லுள்ளத்தை அவர்களுக்குத் தந்தருள வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.*

***விண்ணும் மண்ணும் அழிந்துப் போகும் என் வார்த்தைகள் ஒருபோதும் அழியாது என்று இயம்பிய எம் இறைவா,***

*மீண்டும் வந்துள்ள தொற்றுநோய்க் காலத்தில் எங்கள் முதியோர்களை உமது வார்த்தையால் வளமைப்படுத்திச் சோர்ந்துபோகும் தருவாயில் உமது வாக்கு அவர்களுக்குப் பாதுகாப்பாய் அமைந்திடவும், தொற்றுநோயிலிருந்து பாதுகாத்து; நல்ல உடல்நிலைத் தரவும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***ஆண்டவருடைய கட்டளைகளை இதயத்தில் இருத்திக் கொள்பவர் நீடிய ஆயுளையும், நிலையான நலன்களையும் பெற்றுக் கொள்வார் என்ற மொழிந்த எம் இறைவா!***

*கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். நம்மீது அவர் மிகுந்த அன்பு கொண்டுள்ளார் என்பதை உணர்ந்து, அதே இரக்கத்தையும் அன்பையும் நாம் பிற மனிதர்களுக்கும் காட்ட எங்களுக்கு அருள் புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*